ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நிதா4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பாமருமூவுலகும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பாமருமூவுலகும் ॥

எம்பெருமானது குணம் அழகு முதலியவற்றில் ஆழ்வார் ஈடுபட்டு
அவனைக் காணுமாறு மனம் உருகி அழைத்தல்

‡பா மரு மூவுலகும் படைத்த⋆ பற்பநாபாவோ⋆
பாமரு மூவுலகும் அளந்த⋆ பற்ப பாதாவோ⋆
தாமரைக் கண்ணாவோ!⋆ தனியேன் தனியாளாவோ⋆
தாமரைக் கையாவோ!⋆ உன்னை என்றுகொல் சேர்வதுவே (1)

என்றுகொல் சேர்வதந்தோ⋆ அரன் நான்முகன் ஏத்தும்⋆ செய்ய
நின் திருப்பாதத்தை யான்⋆ நிலம் நீர் எரி கால்⋆ விண்ணுயிர்
என்றிவை தாம் முதலா முற்றுமாய்⋆ நின்ற எந்தாயோ⋆
குன்றெடுத்தாநிரை மேய்த்து⋆ அவை காத்த எம் கூத்தாவோ (2)

காத்த எம் கூத்தாவோ!⋆ மலையேந்திக் கல்மாரி தன்னை⋆
பூத்தண் துழாய் முடியாய்!⋆ புனை கொன்றையஞ்செஞ்சடையாய்⋆
வாய்த்த என் நான்முகனே!⋆ வந்தென் ஆருயிர் நீயானால்⋆
ஏத்தரும் கீர்த்தியினாய்!⋆ உன்னை எங்குத் தலைப்பெய்வனே (3)

எங்குத் தலைப்பெய்வன் நான்⋆ எழில் மூவுலகும் நீயே⋆
அங்குயர் முக்கண் பிரான்⋆ பிரம பெருமான் அவன் நீ⋆
வெங்கதிர் வச்சிரக் கை⋆ இந்திரன் முதலாத் தெய்வம் நீ⋆
கொங்கலர் தண்ணந் துழாய் முடி⋆ என்னுடைக் கோவலனே! (4)

என்னுடைக் கோவலனே!⋆
என் பொல்லாக் கரு மாணிக்கமே⋆
உன்னுடை உந்தி மலர்⋆
உலகம் அவை மூன்றும் பரந்து⋆
உன்னுடைச் சோதி வெள்ளத்து⋆அகம்பால் உன்னைக் கண்டு கொண்டி-
ட்டு⋆
என்னுடை ஆருயிரார்⋆
எங்ஙனேகொல் வந்தெய்துவரே (5)

வந்தெய்து மாறறியேன்⋆ மல்கு நீலச் சுடர் தழைப்ப⋆
செஞ்சுடர்ச் சோதிகள் பூத்து⋆ ஒரு மாணிக்கம் சேர்வது போல்⋆
அந்தரமேல் செம்பட்டோடு⋆ அடி உந்தி கை மார்வு கண் வாய்⋆
செஞ்சுடர்ச் சோதி விடவுறை⋆ என் திருமார்பனையே (6)

என் திருமார்பன் தன்னை⋆ என் மலைமகள் கூறன் தன்னை⋆
என்றும் என் நாமகளை⋆ அகம்பால் கொண்ட நான்முகனை⋆
நின்ற சசிபதியை⋆ நிலம் கீண்டெயில் மூன்றெரித்த⋆
வென்று புலம் துரந்த⋆ விசும்பாளியைக் காணேனோ (7)

ஆளியைக் காண் பரியாய்⋆
அரி காண் நரியாய்⋆ அரக்கர்
ஊளை இட்டன்றிலங்கை கடந்து⋆
பிலம் புக்கொளிப்ப⋆
மீளியம் புள்ளைக்கடாய்⋆
விறல் மாலியைக் கொன்று⋆ பின்னும்
ஆளுயர் குன்றங்கள் செய்து⋆
அடர்த்தானையும் காண்டுங்கொலோ (8)

காண்டுங்கொலோ நெஞ்சமே!⋆ கடிய வினையே முயலும்⋆
ஆண் திறல் மீளி மொய்ம்பின்⋆ அரக்கர் குலத்தைத் தடிந்து⋆
மீண்டும் அவன் தம்பிக்கே⋆ விரி நீர் இலங்கையருளி⋆
ஆண்டு தன் சோதி புக்க⋆ அமரர் அரியேற்றினையே (9)

ஏற்றரும் வைகுந்தத்தை⋆ அருளும் நமக்கு⋆ ஆயர் குல-
த்தீற்றிளம் பிள்ளை ஒன்றாய்ப் புக்கு⋆ மாயங்களே இயற்றி⋆
கூற்றியல் கஞ்சனைக் கொன்று⋆ ஐவர்க்காய் கொடும் சேனை தடிந்து⋆
ஆற்றல் மிக்கான்⋆ பெரிய பரஞ்சோதி புக்க அரியே (10)

‡புக்க அரியுருவாய்⋆ அவுணன் உடல் கீண்டுகந்த⋆
சக்கரச் செல்வன் தன்னைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
மிக்க ஓர் ஆயிரத்துள்⋆ இவை பத்தும் வல்லார் அவரை⋆
தொக்குப் பல்லாண்டிசைத்துக்⋆ கவரி செய்வர் ஏழையரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖



www.prapatti.com